பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
01 07 2024 **MONDAY** 6 30 **PM**
வணக்கம் – மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- டிஜிட்டல் இந்தியா இயக்கம், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- புதிய குற்றவியல் சட்டங்கள், விரைவாக நீதி கிடைப்பதை உறுதி செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- நீட் வெறுப்பு என்ற பெயரில் பிரிவினைவாத பிரச்சாரத்தில் ஈடுபடுவோரை தமிழக அரசு உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- மாநில கல்விக் கொள்கைக்கான குழுவின் அறிக்கை தமிழக அரசிடம் இன்று சமர்ப்பிக்கப்பட்டது.
- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>><<<<

டிஜிட்டல் இந்தியா இயக்கம், அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இந்த இயக்கத்தின் ஒன்பதாவது ஆண்டு கொண்டாட்டங்களை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மக்கள், சேவைகளை எளிதாகப் பெறுவதற்கு இந்த இயக்கம் உதவியுள்ளதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

புதிய குற்றவியல் சட்டங்கள், விரைவாக நீதி கிடைப்பதை உறுதி செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்த சட்டங்கள் இன்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளதை அடுத்து, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நவீன குற்றவியல் முறைக்கு இந்த புதிய சட்டங்கள் உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

முந்தைய குற்றவியல் சட்டங்கள், காவல்துறைக்கு மட்டுமே அரணாக இருந்ததாக அவர் கூறினார்.

புதிய சட்டங்களில் காவல்துறையினர் மட்டுமின்றி, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புகார்தாரர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுவதாக தெரிவித்தார்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலனை பாதுகாப்பதற்கான அம்சங்கள் இந்த சட்டங்களில் இடம்பெற்றுள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>><<<<

தூய்மைப் பணிகளுக்கு பெட்ரோலியத்துறை கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தமது அமைச்சகத்தின் கீழ், 15 நாட்கள் தூய்மைப் பணிகள் இயக்கத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த 15 நாட்கள் தூய்மைப் பணிகள் இயக்கம், தமது அமைச்சகத்தின் அனைத்து துறைகளிலும் முழுமையாக செயல்படுத்தப்படும் என்றார்.

தூய்மை இந்தியா இயக்கத்தின் வெற்றியை அடுத்து இந்த தூய்மைப் பணிகள் இயக்கம் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் கடந்த ஒன்பதாண்டுகளில் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் 12 கோடி கழிவறைகள் கட்டப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

>>>><<<<

நீட் வெறுப்பு என்ற பெயரில் பிரிவினைவாத பிரச்சாரத்தில் ஈடுபடுவோரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பகுதிகளில் உள்ள சாலையோர சுவர்களில், நீட் எதிர்ப்பு என்ற போர்வையில் தேசவிரோத கருத்துக்கள் பரப்பப்படுவதாக கூறியுள்ளார்.

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், தேசவிரோத, பிரிவினைவாத சக்திகளின் செயல்கள் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், தமிழகம் பெரும் ஆபத்தை சந்திக்கும் சூழல் உருவாகிவிடும் என்றும் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

>>>><<<<

மாநில கல்விக் கொள்கைக்கான குழுவின் அறிக்கை இன்று தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது

இதற்காக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி திரு. முருகேசன் தலைமையிலான குழு, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினை சென்னையில் சந்தித்து இந்த அறிக்கையை சமர்ப்பித்தது.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 25 பேர் மீண்டும் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்த மீனவர்களை சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாக கூறி, இலங்கை கடற்படை கைது செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – கார்த்திகேயன் 36 செகண்ட்ஸ்)

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினைக்கு தமிழக அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 61 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை மீட்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

நீதிபதி திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. குமரப்பன் அமர்வு இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, இதுதொடர்பாக மத்திய மாநில அரசுகள் பதிலளிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள மக்களின் சமூக பொருளாதார சூழலை கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தில் தலையிட வேண்டிய நிலை உள்ளதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

தமிழக அரசின் தலைமைச்செயலாளர், மத்திய அரசின் பழங்குடியினர் நலத்துறை, மாநில அரசின் காவல்துறை தலைவர், சேலம், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர்கள் இதுதொடர்பாக பதிலளிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

‘புதிய குற்றவியல் சட்டங்கள்’ குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பாகிறது.

மாநில செய்திப் பிரிவு வழங்கும் இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் Adeeb Mohammed, Shamilee Rajkumar, ஊடகவியலாளர் சியாமளா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இன்று இரவு 8.30-மணிக்கு பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகவுள்ள இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>><<<<

நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 48 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று வழங்கினார்.

>>>><<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' திரவம் மற்றும் ORS கரைசல் வழங்கும் பணியை ஆட்சியர் திருமதி. கற்பகம் இன்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் அமைந்துள்ள அகில இந்திய வானொலியின் கோடை பண்பலை இன்று 25வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

>>>><<<<

நாமக்கல் மாவட்டம், சிலுவம்பட்டி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கான வயிற்றுப்போக்கு தடுப்பு முகாமினை ஆட்சியர் திருமதி. உமா இன்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடமாடும் உணவு பகுப்பாய்வு விழிப்புணர்வு வாகனத்தின் சேவையை ஆட்சியர் திரு. பி.என்.ஸ்ரீதர் இன்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

நெல்லை மாவட்டம், கொடுமுடியாறு அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

>>>><<<<

வேலூர் மாவட்டத்தில் ஐந்து வயதிற்குட்பட்ட ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ திரவம் மற்றும் ORS கரைசல் வழங்கப்படும் என்று ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி கூறியுள்ளார்.

>>>><<<<

தென்காசி மாவட்டம், பழைய குற்றாலத்தில் வனத்துறை சார்பில் சோதனைச்சாவடி அமைக்கப்படவுள்ளது.

>>>><<<<

அரியலூர் மாவட்டத்தில் 4 லட்சம் ரூபாய் மதிப்பிலான தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியின் நான்காம் நாளான இன்று ஃபாலோஆனை பெற்று இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய தென்னாப்பிரிக்கா 373 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனைத் தொடர்ந்து, இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா விக்கெட் இழப்பின்றி 37 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 603 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

தென்னாப்பிரிக்கா முதல் இன்னிங்ஸில் 266 ரன்னுக்கு ஆட்டமிழந்து, ஃபாலோஆனை பெற்றது.

>>>><<<<

Leon மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் பட்டம் வென்றார்.

ஸ்பெயினில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் அவர், 3-1 என்ற புள்ளிக்கணக்கில் Jaime Santos-ஐ வென்று இப்பட்டத்தை கைப்பற்றினார்.

>>>><<<<

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 4 தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற இப்போட்டியின் 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

125 கிலோ எடைப்பிரிவில் Aniruth Kumar-ம், 92 கிலோ எடைப்பிரிவில் Jointy Kumar-ம், 97 கிலோ எடைப்பிரிவில் Sahil Jaglan-னும், 70 கிலோ எடைப்பிரிவில் Abhimanu-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

74 கிலோ எடைப்பிரிவில் Jaideep-ம், 65 கிலோ எடைப்பிரிவில் Rohit-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

79 கிலோ எடைப்பிரிவில் Amit-ம், 57 கிலோ எடைப்பிரிவில் Shubham-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>><<<<

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>END<<<<